# 2010 வரவு செலவுத்திட்டமும் மலையக மக்களும்



இவ் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நாட்டில் வாழும் வறிய மக்களுக்கோ,தொழிலாளர்களுக்கோ, எதுவித நன்மையையும் வழங்காத ஒரு வரவு செலவுத்திட்டமாக இந்த வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வாழ்க்கை செலவு சுமை தாங்கமுடியாது திண்டாடும் மலையக மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்.

தற்போது மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மலையக மக்களைப் பொறுத்த வரையில் மா அவர்களின் பிரதான உணவாகும். இந்த நிலையில் மாவின் விலை அதிகரிப்பு அவர்களுக்கு பெரும்சுமையை கொடுத்துள்ளது, பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஆர்.பி.சூரிய பெருமா மாவின் விலையை ரூபா ஆயிரம் ஆக்கினால் கூட பரவாயில்லை என பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார். இவர் இங்ஙனம் கூறும்போது அங்கே வரவு செலவுத் திட்ட விருந்தில் கேக்கை உண்டு கொண்டிருந்தனர் அரச பக்க பிரமுகர்கள். உள்ளூர் அரிசி உற்பத்தியை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் தென் இலங்கையில் அரிசி உற்பத்திக்கு என்ன நடைபெறுகிறது. ஒருசில அரச சார்பு முதலாளிகளின் செல்வமே அரிசி உற்பத்தியில் அதிகரித்து வருகின்றது என்பதை பாராளுமன்ற உறுப்பினர் சூரிய பெருமா அறிவாரா?

முன்பெல்லாம் மலையாக மக்கள் தோட்ட வேலையை தவிர கால்நடைவளர்ப்பு, சிறுவிவசாய உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ளும் நிலை காணப்பட்டது. இன்று அத்தகைய முயற்சிகளுக்கு தோட்ட நிர்வாகம் தடைவிதித்து வருகிறது. மேலும் தரிசுநிலங்கள் யாவும் தனியார் கம்பனிகளுக்கு விற்கப்படுவதால், இத்தகைய முயற்சிகளை தோட்டத் தொழிலாளர் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது இதனால் மலையக மக்களின் மேலதிக வருமானம் இழக்கப்படுவதோடு, நாட்டின் பால் உற்பத்தி, மரக்கறி உற்பத்தி வீழ்ச்சிகாணும் நிலையில் உள்ளது.

**சுந்தரம் மகேந்திரன்**

தற்போது நாட்டின் ஏனைய பகுதிகளை விட மலையகப் பகுதிகளிலேயே போசாக்கின்மை அதிகமாக உள்ளது. பல்வேறு ஆய்வு அறிக்கைகள் இதை வெளிப்படுத்தி உள்ளது.

இன்று மலையகத்தில் உள்ள தேயிலை தோட்டங்கள் கைவிடப்பட்டு காடுவளர்ப்பு முறை அறிமுகப்படுத்தப்படுகிறது இதன் மூலம் மலையக மக்களின் இருப்பே கேள்விக்குறியாகும் நிலை காணப்படுகின்றது.

கடந்த 150 வருடங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் தேயிலை உற்பத்திக்கு தற்போது என்ன நடக்கிறது மலையக மக்களின் பிரதான தொழிலை பறித்து விட்டு தமது இலக்கை நிறைவேற்ற இனவாத சக்திகள் முயல்கின்றதா?

நட்டத்தில் இயங்கும் தேயிலை தோட்டங்களின் காணிகளை மலையக மக்களுகே வழங்கப்பட வேண்டும். அவர்கள் தமது காணிகளில் முயற்சிகளை மேற்கொண்டு, தமக்கும், நாட்டுக்கும் நல்லதையே செய்வார்கள்

இன்று தோட்டமக்கள் விறகு தட்டுப்பாட்டை பெரியளவில் எதிர்நோக்குகின்றனர். முன்பு அருகே இருக்கும் காடுகளில் விறகை பெறக்கூடிய ஏதுநிலை இருந்தது. இன்று அத்தகைய நிலை இல்லை எனவே இம்மக்களின் விறகு தேவைக்கு மானியம் வழங்கப்பட வேண்டும்.

அன்று தொடக்கம் இன்றுவரை தாய்சேய் மரணவிகிதம் மலையகத்திலேயே அதிகமாக உள்ளது. அண்மையில் புசல்லாவை பகுதியில் பூரட்டாவி தோட்டத்தில் குழந்தையை பிரசவிப்பதற்காக வலி எடுத்திருந்த தாய்க்கு உரிய போக்குவரத்து வசதி ஏற்பாடு இல்லாததால் குழந்தை போகும் வழியில் பிரசவிக்கப்பட்டு மரணத்தை தழுவியுள்ளது.

முன்பு இவை போன்ற பிரச்சினைகளுக்கு தோட்ட நிர்வாகத்தை குறை கூற முடியும் இன்று இப்பகுதிகளில் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் பதவி வகிக்கின்ற அங்கத்தவர்களே பதில் கூற வேண்டும். தாம் சுகபோகத்தை அனுபவித்து கொண்டு ஊடகங்களில் மாத்திரம் உறுமும் இவர்களினால் மலையக மக்களின் பிரச்சினைகள் ஒரு போதும் தீரமாட்டாது.

மேலும் மலையக பெண்கள் திருமணம் முடிந்த பின்பு தோட்டங்களில் வேலைக்கு சென்றால், அவர்கள் கர்ப்பிணியாக உள்ளனரா? என்று சோதிக்கப்படுகிறதாம். இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் நிகழ்வாகும்.

தற்போது மலையக மக்கள் மத்தியில் தலைவர்களாக அடையாளம் காட்டும் சகலரும் அரசாங்கத்திடம் ஏதோ வழியில் சலுகை பெறும் நிலையிலேயே உள்ளனர். இத்தகைய தலைமைகளை மலையக மக்கள் தொடர்ந்தும் நம்பப்போகின்றார்களா?

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர ஐக்கியப்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு இன்றைய மலையக தலைமைகள் ஒருபோதும் உடன்படமாட்டார்கள். எனவே புதிய தலைமைகளை புதிய உறவுகளை நாடி மலையக மக்கள் பயணிக்க தயாராக வேண்டும்.

# யாழ் பல்கலைக்கழக மாணவர்களே !

## எவ்வளவு காலம் மௌனமாக இருக்கின்ற போகின்றோம்

**பெருமாள் பூமிநாதன்**

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போயிருப்பதற்கான தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்று உள்ளது. இது தொடர்பாக காணாமல் போனோரை தேடியறியும் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. எமது அமைப்பு மேற்படி மாணவர்களின் நிலமை தொடர்பாக பாரிய கவன ஈர்ப்பு போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த உள்ளது.

இன்று தென் இலங்கையில் இனவாத அமைப்புக்கள் தமிழ் மக்கள் மீது கரிசனை காட்டுவது போல் முதலைக்கண்ணீர் வடிக்கின்றன. மக்கள் கொல்லப்படுவதற்கும், காணாமல் போய் இருப்பதற்கும் இந்த இனவாத அமைப்புக்களின் செயற்பாடுகளே காரணமாக அமைந்தன. தமிழ் மக்கள் தமது விடுதலைக்காகவே போராடினர். அந்த போராட்டங்களை தென் இலங்கை இனவாத அமைப்புக்கள் பயங்கரவாதம் என்று நாமம் சூட்டியது.

இன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமை தொடர்பாக கேள்வி எழுப்பும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கின்றதா? தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றதா? இல்லவே இல்லை இந்த மாணவர் அமைப்பு தென் இலங்கையில் தமது அமைப்புக்காக உண்டியலில் குலுக்கும் போது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக நாம் கேள்வி எழுப்பிய போதெல்லாம் அவர்கள் இனவாத பதிலையே வழங்கி வந்தனர்.

இன்று ஏகாதிபத்திய சக்திகளினதும் இந்திய ஆதிக்க சக்திகளினதும் துணையுடன் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் நசுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் எமக்கு உதவுவதற்கு இவர்கள் முன்வந்துள்ளார்களாம். இவர்களை எப்படி நம்பமுடியும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது சக மாணவர்களின் நிலைக்காக போராட முன்வர வேண்டும். தொடர்ந்தும் மௌனமாக இருப்பதால் வேண்டத்தகாத சக்திகள் அங்கே நுழைவதற்கே வழிசமைக்கும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சோர்வு உற்றிருந்த காலப்பகுதி முழுவதும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்ட செயற்பாடுகள் ஊக்கத்தை அளித்தன

இன்றுள்ள சூழ்நிலையில் உங்களின் சக மாணவர்களின் நிலைக்காக நீங்கள் போராட முன்வர வேண்டும். இது உங்களுக்கு உள்ள தார்மீக கடமையாகும். காணாமல் போனோரை தேடி அறியும் குழு எவ்வளவோ அச்சத்தின் மத்தியில், அச்சுறுத்தல்களின் மத்தியில், காணாமல் போனவர்கள் தொடர்பாக பல போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

எமது போராட்ட நடவடிக்கைகளுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவு இன்றியமையாததாகும்.

விடுதலைப் போராட்டம் தேவையற்ற ஒன்று சரணாகதி நிலை போதுமான ஒன்று என்னும் விசக் கருத்துக்கள் இன்று தமிழ்மக்கள் மத்தியில் தூவப்பட்டு வரப்படுகிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட பாதையில் விடப்பட்ட மூலோபாய தவறுகள் காரணமாக நாம் இவளவு பின்னடைவை சந்தித்து உள்ளோம் இதில் இருந்து மீள்வதற்கு சிறந்த மூலோபாயத்தையும் போராட்ட வழி முறையும் முன்னெடுக்கப்பட வெண்டும். இதை தவிர்த்து அடிமை நிலையை நோக்கி எமது மக்களை வழி நடத்த முயல்வது துரோகத்தின் உச்ச நிலையாகும்.

எனவே காணாமல் போனோர்களை தேடியறியும் குழு எடுக்கும் முயற்சிகளுக்கு உங்களின் தார்மீக ஆதரவை வழங்குமாறு மிகவும் தோழமையுடன் யாழ் பல்கலைக்கழக மாணவர்களை வேண்டுகின்றோம். நிர்வாக சீர்திருத்தத்திற்காக சுவரொட்டிகளை ஒட்டும் நீங்கள் உங்களில் இருந்து காணாமல் போயிருக்கும் மாணவர்கள் தொடர்பாக சில சுவரொட்டிகளை யாராவது ஒட்ட முன் வருவீர்களா?